எனது இலக்கம்: அ.ப.சே./ஏ/அ.நி.அமை/25/2014

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07.

2014.11.19

அமைச்சுக்களின் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

மாவட்டச் செயலாளர்கள்

**<u>தற்காலிக/அமைய (நாளாந்த)/மாற்று நிலை/ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் கீழ் நிரந்தர நியமனம் வழங்குவதற்காகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.</u>**

2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 மட்டில் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. அதனடிப்படையில் தங்களது அமைச்சில்/திணைக்களத்தில், தற்காலிக/அமைய (நாளாந்த)/மாற்று நிலை/ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட, இணைந்த சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படக்கூடிய பதவிகளைக் கொண்ட அலுவலகர்களை நிரந்தரமாக்குவது தொடர்பில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறிவிக்கின்றேன்.

I. அ.நி.சு. 25/2014 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

II. 180 நாட்கள் தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

III. இணைந்த சேவைக்குரிய பதவிகளில் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

IV. சாரதி பதவிகளுக்காக தற்காலிக/அமைய (நாளாந்த)/மாற்றுநிலை/ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் நியமிக்கப்பட்ட திகதியில், தனிப்பட்ட/வாடகை வாகனம் மற்றும் தார் நிறை ஹொண்டர் 24 இற்குக் குறைந்த 'ஸ்டேஷன் வெகன்' வாகனத்தை ஓட்டுதல் தொடர்பாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். (ஆகக் குறைந்தது 'சீ' மற்றும் 'சீ1' வாகன வகுப்பிற்கான அனுமதிப்பத்திரமொன்றை அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் 'பீ' வகுப்பு அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றிருத்தல்)

02. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு மட்டும் தற்காலிக நியமனக் கடிதமொன்றை நிறுவனத் தலைவர் வழங்குதல் வேண்டும். தற்காலிக நியமனக் கடிதத்தின் மாதிரியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (அ.ப.சே. இணைப்பு 01, சாரதி இணைப்பு 02). ஒவ்வொரு அலுவலகருக்கும் வெவ்வேறாகக் கோவைகளைத் தயாரித்து, முறையான நியமனத்தை வழங்குவதற்காக, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தையும் (அ.ப.சே. இணைப்பு 03, சாரதி இணைப்பு 04) பூர்த்தி செய்து, இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். கோவைகளைத் தயாரிக்கும் போது அ.ப.சே. இணைப்பு 05 சாரதி இணைப்பு 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத ஊழியர்களுக்கு முறையான நியமனங்களை வழங்கக்கூடிய இயலுமை காணப்படாதாகையால், தற்காலிக நியமனங்களை வழங்கும் போது, உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமை தொடர்பில் தாங்கள் தனிப்பட்ட ரீதியில் திருப்தியடைதல் வேண்டும்.

04. தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு 03 மாதங்கள் செல்வதற்கு முன்னர், முறையான நியமனக்கடிதத்தை வழங்கும் பொருட்டு, அக்கோவைகளை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றீர்கள்.

கே.வீ.பீ.எம்.ஜே.கமகே

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு 01

<u>தற்காலிக நியமனக் கடிதம்</u>

எனது இலக்கம்:-

………………….. அமைச்சு/திணைக்களம்

கொழும்பு.

2014. திகதி.

………………………….. ஊடாக

திரு/திருமதி/செல்வி:……………………………………

தே.அ.அ.இலக்கம்:……………………………………...

**<u>அலுவலக பணியாளர் சேவையின் 111ஆம் தரத்தின் பதவியொன்றிற்கு நியமித்தல்</u>**

அ.நி.சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் அடிப்படையில் ……………… திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் தங்களை அலுவலக பணியாளர் சேவையின் 111ஆம் தரத்தின் ……………………. பதவியொன்றிற்கு நியமிக்கின்றேன்.

02. இது தற்காலிக நியமனக் கடிதம் என்பதுடன், உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின், முறையான நியமனக் கடிதமொன்று இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உரிய காலத்தில் வழங்கப்படும். அவ்வாறில்லாதுவிடின் இந்நியமனக் கடிதத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

03. தாபன விதிக்கோவையினது ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத் தலைவரின் கட்டளைகளுக்கும், காலத்திற்குக் காலம் அரசாங்கத்தால் வெளியிடப்படுகின்ற வேறு விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும் தாங்கள் உட்படுதல் வேண்டும்.

04. இப்பதவிக்கான மாதாந்தச் சம்பள அளவுத் திட்டமானது 11730 – 10 x 120 – 10 x 130 – 10 x 145 – 12 x 160 – 17600/- ஆகும். 2006.04.25ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும். நியமனம் வழங்கப்பட்டு 3 வருடத்திற்குட்பட்ட காலப்பகுதியில் அலுவலக பணியாளர் சேவையின் தரம் 111இற்குரிய வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் தாங்கள் சித்தியடைதல் வேண்டும்.

05. இக்கடிதம் கிடைக்கப்பெற்றது என்பதையும், அதில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய தாங்கள் இப்பதவியை பொறுப்பேற்கின்றீர்களா என்பதையும் இரண்டு வாரங்களுக்குள் எனக்கு அறிவிக்கவும். நியாயமான காரணங்களின்றி மேலே கூறப்பட்டுள்ளவாறு தாங்கள் கடமையைப் பொறுப்பேற்கத் தவறின் இந்நியமனம் வலுவிழக்கப்படும்.

…………………………………………….

அமைச்சு / திணைக்களத் தலைவரது கையொப்பம்

பதவி முத்திரை:

பிரதி: இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

<u>தற்காலிக நியமனக் கடிதம்</u>

எனது இலக்கம்:-

………………….. அமைச்சு/திணைக்களம்

கொழும்பு.

2014. திகதி.

………………………….. ஊடாக

திரு: ……………………………………

தே.அ.அ.இலக்கம்:………………………………………...

**<u>சாரதி சேவையின் 111ஆம் தரத்தின் பதவியொன்றிற்கு நியமித்தல்</u>**

அ.நி.சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் அடிப்படையில் ……………… திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் தங்களை சாரதி சேவையின் 111ஆம் தரத்தின் பதவியொன்றிற்கு நியமிக்கின்றேன்.

02. இது தற்காலிக நியமனக் கடிதம் என்பதுடன், உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின், முறையான நியமனக் கடிதமொன்று இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உரிய காலத்தில் வழங்கப்படும். அவ்வாறில்லாதுவிடின் இந்நியமனக் கடிதத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

03. தாபன விதிக்கோவையினது ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத் தலைவரின் கட்டளைகளுக்கும், காலத்திற்குக் காலம் அரசாங்கத்தால் வெளியிடப்படுகின்ற வேறு விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும் தாங்கள் உட்படுதல் வேண்டும்.

04. இப்பதவிக்கான மாதாந்தச் சம்பள அளவுத் திட்டமானது 12470 – 10 x 130 – 10 x 145 – 10 x 160 – 12 x 170 – 18860/- ஆகும். ரூ. 12860/- இற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையாகும். (2006.04.25ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய).

05. இக்கடிதம் கிடைக்கப்பெற்றது என்பதையும், அதில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய தாங்கள் இப்பதவியை பொறுப்பேற்கின்றீர்களா என்பதையும் எனக்கு அறிவிக்கவும்.

…………………………………………….

அமைச்சு / திணைக்களத் தலைவரது கையொப்பம்

பதவி முத்திரை:

பிரதி: இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.